**செய்தி வெளியீடு எண்: 43** **நாள்: 21.01.2013**

<u>**செய்தி வெளியீடு**</u>

மாற்றுத் திறனாளிகள் ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தை எய்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 1993-ஆம் ஆண்டிலேயே ஊனமுற்றோருக்கான தனி இயக்ககத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், 1994 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கென விரிவான மாநிலக் கொள்கையையும் வெளியிட்டார்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு சம வாய்ப்பு அளிப்பது, அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது, சமுதாய வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் முழு பங்கேற்பினை உறுதி செய்வது மற்றும் அவர்களுக்கு சிறந்த கல்வி அளிப்பது போன்ற பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

6 வயதுக்குட்பட்ட பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அமைத்தல், கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள், பணிபுரியும்/சுய தொழில் புரியும் மாற்றுத் திறனாளிக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குதல், செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவ மாணவியருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் காதொலிக் கருவிகளுக்குப் பதிலாக 10,000 ரூபாய் மதிப்புள்ள அதிக திறன்வாய்ந்த காதுக்கு பின்பகுதியில் அணியும் காதொலிக் கருவிகள் வழங்குதல், மாற்றுத் திறனாளிகளுக்காக உணவு மற்றும் தங்கும் வசதியுடன் கூடிய தொழிற் பயிற்சி மையங்கள் அமைத்தல், பூந்தமல்லியிலுள்ள பார்வையற்றோர் பள்ளியினை புதுப்பித்தல், பார்வை குறைவுள்ள குழந்தைகள், படிப்பதற்காக எழுத்துக்களை பெரிதாக்கி பார்க்கக்கூடிய கண்ணாடியை வழங்குதல் என பல்வேறு திட்டங்களை மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயவலிதா தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தற்பொழுது மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் இயங்கி வருகின்றன. இதில் வசிக்கும் தொழுநோயாளிகளுக்கு எந்த விதமான பராமரிப்பு தொகையும் வழங்கப்படுவதில்லை. இதனை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொழுநோயாளிகளின் நலன் கருதி, பராமரிப்புத் உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் 6,161 தொழுநோயாளிகள் பயன்பெறுவர். இதன் மூலம் அரசுக்கு 7 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

மேலும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ் நடத்தப்படும் 10 அரசு மறு வாழ்வு இல்லங்களில் வாழ்பவர்கள், தங்களுக்கான காலணிகளை தாங்களே தயாரித்து வந்தனர். ஆனால் அந்த இல்லங்களில் தற்பொழுது, வேலை செய்ய இயலாத வயது முதிர்ந்த மற்றும் தொழுநோயினால் கை, கால் இழந்தவர்களின் எண்ணிக்கை அதிக எண்ணிக்கையில் உள்ளதால், அவர்களால் தங்களுக்கான காலணிகளை தாங்களே

தயாரித்துக் கொள்ள இயலவில்லை. எனவே, இந்த இல்லங்களில் தங்கியுள்ள 1,301 இல்லவாசிகள், ஒவ்வொருவருக்கும், 300 ரூபாய் மதிப்புள்ள ஒரு இணை காலணியை வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்து வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு 3 லட்சத்து 90 ஆயிரத்து 300 ரூபாய் செலவினம் ஏற்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கிழ் இயங்கி வரும் விடுதிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு செலவினத்தைபோல், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் கீழ் இயங்கும் 23 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 1,731 மாணவ, மாணவியர்கள் மற்றும் 54 அரசு அங்கீகாரம் பெற்ற சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 6,483 மாணவ, மாணவியர் என 8,214 மாணவ, மாணவியருக்கு தற்பொழுது நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு செலவினத்தை 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென 5 கோடியே 33 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள், மாநில வள பயிற்சி மையம், சிறப்புப் பள்ளிகள், பகல் நேர காப்பகம் ஆகியவற்றில் பணிபுரியும் 302 சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் 205 மனவளர்ச்சிக் குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் 600 சிறப்பு ஆசிரியர்களுக்கு அரசால் ஊதிய மானியமாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த 5,000 ரூபாயை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையில் கீழ் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு அரசால் ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தை மேலும் 30 காது கேளாதோர் சிறப்பு பள்ளிகளுக்கும், 9 பார்வையற்றோர் சிறப்பு பள்ளிகளுக்கும் நீட்டிப்பு செய்யவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் ஒரு பள்ளிக்கு 3 ஆசிரியர் வீதம் 117 ஆசிரியர்களுக்கு அரசு ஊதிய மானியமாக ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாதந்தோறும் 10,000 ரூபாய் வழங்கப்படும்.

இதன் மூலம் மொத்தத்தில் 1,019 சிறப்பாசிரியர்கள் பயன் பெறுவார்கள். அரசுக்கு ஆண்டுக்கு 12 கோடியே 22 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

கை கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள், பணிபுரியும் /சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவீன செயற்கை அவயங்கள் வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடான 35 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் போதுமானதாக இல்லை என்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இத்திட்டத்திற்காக மேலும் 70 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, மொத்தத்தில் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 1 கோடியே 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இதேபோன்று மாற்றுத் திறனாளிகளின் நன்மையைக் கருதி, அவர்கள் பயன்படுத்தும் பேட்டரியால் இயங்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட மூன்று சக்கர மோட்டார் வண்டிகளுக்கு இதுவரை வசூலிக்கப்பட்டு வந்த மதிப்பு கூட்டு வரியான 14.5 விழுக்காட்டினை வசூலிப்பதில் இருந்து முழு விலக்களித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகை செய்யும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 21.1.2013.